


திருச்சியில் உள்ள துறையூர் பொண்ணு சங்கம் பட்டியில் கழக முதன்மைச் செயலாளரும் நகராட்சி நிர்வாக துறை அமைச்சருமான கே என் நேரு என் வாக்கு சாவடி வெற்றி வாக்குச்சாவடி பரப்புரைக் கூட்டத்தை துவக்கி வைத்து சிறப்புரையாற்றினார். நிகழ்ச்சியில் வடக்கு மாவட்டச் செயலாளரும் முசிறி சட்டமன்ற உறுப்பினருமான காடுவெட்டி தியாகராஜன், துறையூர் எம்.எல்.ஏ. ஸ்டாலின் குமார் மாவட்ட பொருளாளர் தர்மன் ராஜேந்திரன் ஒன்றிய செயலாளர்கள் அண்ணாதுரை, வீரபத்திரன், அசோக் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



நீலகிரி மாவட்டம், கோத்தகிரி ஒன்றியக் கழகத்திற்கு உட்பட்ட பூத் எண் 83 காமராஜ்புரம் பகுதியில் என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி பரப்புரை நிகழ்ச்சி கோத்தகிரி ஒன்றியச் செயலாளர் நெல்லை கண்ணன் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் அரசு தலைமைக் கொறடா கா .ராமச்சந்திரன் மற்றும் நீலகிரி மாவட்ட கழகப் பொறுப்பாளர் கே எம் ராஜு ஆகியோர் கலந்து கொண்டு, திராவிட மாடல் அரசின் 4. 5 ஆண்டு சாதனைகளை பொதுமக்கள் மத்தியில் பட்டியலிட்டு பரப்புரை மேற்கொண்டனர். இந்நிகழ்ச்சியில் மாவட்ட அவைத் தலைவர் போஜன்,பொதுக்குழு உறுப்பினர் வீரபத்திரன்,BLA 2 ஞானசேகரன்,BDA சுரேஷ்குமார்,BLC நிர்வாகிகள் செல்வராஜ்,ஜோதிமணி,அசோக் குமார், வெங்கடேசன்,அருமைநாதன்,கோவிந்தசாமி, மற்றும் கிளைக் கழக நிர்வாகிகள் மற்றும் ஊர் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

‘ஷ்னைடர்’ எலெக்ட்ரிக் குழுமம் சார்பில் – சென்னை – கோவை ஆலைகளின் விரிவாக்கம்; – ஓசூரில் புதிய ஆலை!

# ரூ.718 கோடி முதலீட்டில் - 663 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் புரிந்துணர்வு ஒப்பந்தம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில் மேற்கொள்ளப்பட்டது!

சென்னை, டிச.20-

**ரூ.718 கோடி முதலீட்டில், 663 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில், ஷ்னைடர் எலெக்ட்ரிக் குழுமம் அதன் சென்னை மற்றும் கோயம்புத்தூர் ஆலைகளின் விரிவாக்கம் மற்றும் ஓசூரில் புதிய ஆலை அமைப்பதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் மேற்கொள்ளப்பட்டது.**

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் நேற்று முன்தினம் (18.12.2025) தலைமைச் செயலகத்தில், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில், ஷ்னைடர் எலெக்ட்ரிக் குழுமம் 718 கோடி ரூபாய் முதலீட்டில் 663 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் சென்னை மற்றும் கோயம்புத்தூரில் அமைந்துள்ள Schneider Electric India Private Limited (SEIPL) நிறுவனத்தின் ஆலைகளின் விரிவாக்கம் மற்றும் ஓசூரில் Schneider Electric IT Business India Private Limited (SEITB) நிறுவனத்தின் மின்கலன்கள் (Batteries) மற்றும் குளிர்விப்பு தீர்வுகளுக்கான (Cooling solutions) புதிய ஆலை அமைக்கும் திட்டங்களுக்கான புரிந்து ணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.

தமிழ்நாட்டின் இளைஞர்களுக்கு அதிக எண்ணிக்கையிலான வேலை வாய்ப்பு களை உருவாக்கவும், 2030-க்குள் தமிழ்நாட்டின் பொருளாதாரம் 1 ட்ரில்லியன் அமெரிக்க டாலர் அளவிற்கு வளர்ச்சி பெறுவதற்கும், தேவையான முதலீடுகளை ஈர்ப்பதற்கும் தமிழ்நாடு அரசு பல்வேறு சிறப்பான முன்னெடுப்புகளை மேற்கொண்டு வருகிறது. இவ்வரசு பொறுப்பேற்றதில் இருந்து, அனைவரையும் உள்ளடக்கிய சீரான மற்றும் பரவலான வளர்ச்சி என்பதில் சிறப்பு கவனம் செலுத்தி வருகிறது. மாநிலம் முழுவதும் உலகத்தரம் வாய்ந்த உட்கட்டமைப்பு வசதிகளை உருவாக்கி, அனைத்து மாவட்டங்களிலும் தொழில் வளர்ச்சி மேம்பட அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

**ஷ்னைடர் எலெக்ட்ரிக் குழுமம்**

ஷ்னைடர் எலெக்ட்ரிக் குழுமம், மின்சாரம் மற்றும் மின்னணு சாதனங்கள் உற்பத்தி மற்றும் மின் மேலாண்மை தீர்வுகள் ஆகியவற்றில் ஈடுபட்டு வருகிறது. சுமார் 30 வருடங்களாக, தமிழ்நாட்டில் செயல்பட்டு வரும் இக்குழுமம், தனது நிலையை மேலும் வலுப்படுத்தும் வகையில், சென்னை மற்றும் கோயம்புத்தூரில் அமைந்துள்ள ஸ்மார்ட் உற்பத்தி ஆலைகளை விரிவுபடுத்தவும், ஓசூரில் ஒரு புதிய அதிநவீன உற்பத்தி ஆலை நிறுவவும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில் நேற்று முன்தினம் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.

இந்த முதலீடுகள் மூலம், ஏற்றுமதியை ஊக்குவித்து, உள்ளூர் உற்பத்தி மற்றும் வணிக வளர்ச்சியை வலுப்படுத்த ஷ்னைடர் எலெக்ட்ரிக் குழுமம் திட்ட மிட்டுள்ளது.

இந்நிகழ்ச்சியில், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை செயலாளர் வி.அருண் ராய், தமிழ்நாடு தொழில் வழிகாட்டி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் தலைமைச் செயல் அலுவலர் மருத்துவர் தாரேஸ் அகமது, ஷ்னைடர் எலெக்ட்ரிக் குழுமத்தின் துணைத் தலைவர் அன்ஷும் ஜெயின், நிதி இயக்குநர் சுனில் சத்யப்ரகாஷ், சென்னை வளாகத்தின் தலைவர் விஸ்வநாதன் பொன்னுசாமி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# மக்களின் பயன்பாட்டிற்காக தொலைத் தொடர்புச் சேவையை மேம்படுத்துவீர்!

## ஒன்றிய தொலைத் தொடர்பு அமைச்சரிடம் ஆ.மணி எம்.பி. மனு!

புதுடெல்லி, டிச.20-

தர்மபுரி மாவட்டத்தில் காரிமங்கலம் தாலுகா: ஜிட்டான் அள்ளி,ஜக்க சமுத்திரம் தர்மபுரி தாலுகா, தொப்பூர் கணவாய் மற்றும் அதை சுற்றியுள்ள பகுதிகள்,பென்னாகரம் தாலுக்கா: கூக்குட்ட மருதஅள்ளி ஊராட்சி (முதுகாம்பட்டி), பெரும்பாலை ஊராட்சி (சாமத்தல்), தொன்னகுட்டஅள்ளி ( சீலநாயக்கனூர், அஜ்ஜன அள்ளி ஊராட்சி (சின்னப்ப நல்லூர்), அரூர் தாலுக்கா:



வேடகட்டமடுவு ஊராட்சி ( கருங்கல்பாடி) சிட்லிங் ஊராட்சி (வேலனூர்) கீரைபட்டி ஊராட்சி ( வள்ளி மதுரை) ஆகிய இடங்களில் மக்களின் பயன்பாட்டிற்காக தொலை தொடர்பு சேவை இல்லாமல்,பள்ளி கல்லூரி மாணவர்கள் ஆன்லைன் வகுப்புக்கு இன்டர்நெட் சேவை மிகவும் மந்தமாக இருப்பதால் உடனடியாக டவர் இல்லாத இடங்களில் டவர் அமைத்து தரும்படியும்,

இன்டர்நெட் சேவை மிகவும் குறைவாக இருக்கும் இடத்தில் அதை மேம்படுத்தி தருமாறு தர்மபுரி மாவட்டத்து மக்கள் சார்பாக புது டெல்லியில் ஒன்றிய தொலைத் தொடர்பு அமைச்சர் ஜோதிராதித்ய சிந்தியாவிடம் தர்மபுரி நாடாளுமன்ற உறுப்பினர் வழக்கறிஞர் ஆ.மணி நேரில் கோரிக்கை மனுவினை அளித்தார்.

கே.கே.செல்லப்பாண்டியன் தலைமை! எம்.கோவிந்தராஜன் வரவேற்புரை!

# புல்வயலில் துணை முதல்வர் பிறந்தநாள் - மாபெரும் பொதுக்கூட்டம்!

## திண்டுக்கல் ஐ.லியோனி சிறப்புரை!

புதுக்கோட்டை, டிச.20-

புதுக்கோட்டை வடக்கு மாவட்டம் அன்னவாசல் கிழக்கு ஒன்றிய திமுக சார்பில் கழக இளைஞரணி செயலாளர், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு புல்வயல் கலைஞர் திடலில் 14.12.2025 ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணி அளவில் புதுக்கோட்டை வடக்கு மாவட்டச் செயலாளர் கே.கே. செல்லப்பாண்டியன் தலைமையிலும் அன்னவாசல் கிழக்கு ஒன்றிய செயலாளர் எம். கோவிந்தராஜன் வரவேற்புரையிலும் மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெற்றது. கழக கொள்கைப்பரப்பு செயலாளர், தமிழ்நாடு பாடநூல் கழக தலைவர் திண்டுக்கல் ஐ.லியோனி சிறப்புரை யாற்றினார்.

நிகழ்வில் மாநில விவசாய அணி துணைச் செயலாளர் கே.ஆர்.என்.போஸ், மாவட்ட துணைச் செயலாளர்கள் அரு.வீரமணி, எஸ். எஸ்.கருப்பையா, ஒன்றியச் செயலாளர்கள் கே.எஸ். சந்திரன், தென்னலூர் எம். பழனியப்பன், அன்னவாசல் பேரூர் கழக செயலாளர் எம்.எஸ்.ஏ.முகம்மது ரிஷா, கழக பாடகர் ஆக்காட்டி ஆறுமுகம், தலைமை கழக பேச்சாளர் தமிழ் இனியன், சுந்தர்ராஜ், சாங்கிராப்பட்டி ரவி, கிளிக்குடி முத்துச் செல்வம், மணி, மாடசாமி, முருகப்பன், மாங்குடி அண்ணாத்துரை, விஸ்வநாதன், முத்துக்கருப்பன், அப்துல்லா, கோவிந்தராஜ், மாரிமுத்து மற்றும் மாவட்ட ஒன்றிய, நகர, வட்ட கிளைக் கழக நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொண்டனர். முடிவில் மாவட்ட சுற்றுச்சூழல் அணி துணை அமைப்பாளர் ஏ.சுந்தர்ராஜ் நன்றி.கூறினார். முன்னதாக மாலை 4 மணியளவில் கலைமாமணி ஆக்காட்டி ஆறுமுகம் இசை நிகழ்ச்சி நடைபெற்றது. கூட்டத்தில் அதிமுகவைச் சேர்ந்த ராமசாமி அம்பலக்காரர் அக்கட்சியில் இருந்து விலகி மாவட்ட கழக செயலாளர் கே.கே.செல்லப்பாண்டியன் முன்னிலையில் தன்னை கழகத்தில் இணைத்துக் கொண்டார்.



ஈரோடு பவானி நகர கழக செயலாளராக தொடர்ந்து 25 ஆண்டு காலம் பணியாற்றி வந்த ப.சி.நாகராஜன் மறைவையொட்டி அவரது இல்லத்திற்கு கழக இளைஞரணி துணை செயலாளரும், ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினருமான கே.இ.பிரகாஷ் நேரில் சென்று அவரது குடும்பத்தினருக்கு ஆறுதல் தெரிவித்தார். நிகழ்வில் ப.சி.நா.இளங்கோவன், பவானி நகர் மன்ற தலைவர் சிந்தூரி இளங்கோவன் ஆகியோர் உள்ளனர்.

பெரம்பலூர் மாவட்டத்தில்

# மின் சிக்கன வார விழாவினை முன்னிட்டு விழிப்புணர்வுப் பிரச்சார வாகனம்!

## அமைச்சர் சா.சி.சிவசங்கர் கொடியசைத்து தொடங்கி வைத்தார்!

பெரம்பலூர்,டிச20-

பெரம்பலூர் நகராட்சிக்குட்பட்ட தமிழ்நாடு மின்சார வாரிய மேற்பார்வை அலுவலகத்தில் மின் சிக்கன வார விழாவை முன்னிட்டு பொதுமக்கள் சிக்கனமாக மின்சாரத்தை பயன்படுத்துவது தொடர்பான விழிப்புணர்வு பிரச்சார வாகனத்தினை போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர், மாவட்ட ஆட்சித்தலைவர் ந.மிருணாளினி தலைமையில், கொடியசைத்து தொடங்கி வைத்தார்.இந்நிகழ்ச்சியில் பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பி னர் ம.பிரபாகரன், சங்கரன்கோவில் சட்டமன்ற உறுப்பினர் ஈ.ராஜா ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

15.12.2025 முதல் 20.12.2025 வரை மின் சிக்கன வாரம் கடைபிடிக்கப்படுகின்றது. இதனை முன்னிட்டு பொதுமக்கள் அன்றாடம் பயன்படுத்தும் அத்தியாவசியங்களில் மின்சாரம் முக்கியமானதாகும். எனவே, மின்சாரத்தை தங்களுடைய வீடுகளில் மற்றும் பொது இடங்களில் பயன்படுத்தும் போது தேவையில்லாமல், யாருக்கும் பயனற்ற முறையில் மின்சாரத்தை பயன்படுத்துவதை தவிர்த்து சிக்கனமாக பயன்படுத்தி மின்சாரத்தையும் மின்சார கட்டணத்தையும் குறைத்து, தங்களுடைய பொருளாதாரத்தையும் மேம்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதை வலியுறுத்தும் வகையில் விழிப்புணர்வு துண்டு பிரசுரங்கள் வழங்குதல் உள்ளிட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது.

விழிப்புணர்வு வாகனத்தை கொடியசைத்து தொடங்கி வைத்தார். அதன் பிறகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது,

மின்சாரத் துறைக்கு தேவையான அலுவலகங்கள் புதிதாக கட்டுவதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மின்வாரியத்திற்கு தேவையான நிதிகளை பெறுவதற்கு ஒன்றிய அரசிடம் தொடர்ந்து கோரிக்கை வைக்கப்பட்டதன் அடிப்படையில் பல்வேறு நிறுவனங்களின் வாயிலாக நிதி விடுவிக்கப்பட்டுள்ளது. தற்போது புதிய துணை மின் நிலையங்கள் அமைப்பதற்கு ஒப்பந்தங்கள் கோரப்பட்டுள்ளது. அதேபோல புதிய டிரான்ஸ்பார்மர் அமைப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஸ்மார்ட் மீட்டர் அமைப்பதன் மூலம் மின் அளவீடு செய்வதற்கு எளிதாக இருக்கும். ஸ்மார்ட் மீட்டர் அமைப்பதற்கான ஒப்பந்தம் கோரப்பட்டுள்ளது. ஒப்பந்தம் பெறப்பட்டவுடன் பணிகள் துவங்கப்படும்.

தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகத்தின் கட்டுப்பாட்டில் உள்ள 8 மண்டலத்திற்கும் புதிய ஓட்டுனர்கள் மற்றும் நடத்துனர்கள் தேர்ந்தெடுப்பதற்கு எழுத்து தேர்வு மற்றும் நேர்முகத் தேர்வுகள் முடிவு பெற்றுள்ளது. நேர்முகத் தேர்வுகள் முடி வுற்றவர்கள் விவரங்கள் சேகரிக்கப்பட்டு சான்றுகள் சரிபார்த்தல் பணிகள் முடிவுற்றதும் காலி பணியிடங்கள் விரைவில் நிரப்பப்படும்.

இவ்வாறு தெரிவித்தார்.

இதில், தமிழ்நாடு மின் வாரியம் / தமிழ்நாடு மின் பகிர்மான கழகத்தின் மேற்பார்வை பொறியாளர் பொறி.வீ.மேகலா., பெரம்பலூர் கோட்ட செயற்பொறியாளர்கள் பரமேஸ்வரி, அசோக்குமார் .பெரம்பலூர் நகர்மன்ற தலைவர் திரு.அம்பிகா ராஜேந்திரன் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



நாகை மாவட்டம் திருமருகல் வடக்கு ஒன்றிய கழக செயலாளர் செல்வ செங்குட்டுவன் ஏற்பாட்டில் திருமுருகல் வடக்கு ஒன்றியம் ஆலத்துாரைச் சேர்ந்த அ.தி.மு.க. உள்ளிட்ட பல்வேறு மாற்றுக் கட்சிகளை சேர்ந்தவர்கள் 42 குடும்பத்தினர் அக்கட்சியில் இருந்து விலகி நாகை மாவட்ட கழக செயலாளர் தமிழ்நாடு மீன் வளர்ச்சி கழக தலைவர் என். கௌதமன் முன்னிலையில் கழகத்தில் இணைந்தனர். உடன் திருமருகல் வடக்கு ஒன்றிய கழக செயலாளர் செல்வ. செங்குட்டுவன், ஒன்றிய விவசாய தொழிலாளர் அணி அமைப்பாளர் பாண்டியன், ஒன்றிய பொறியாளர் அணி துணை அமைப்பாளர் சுபாஷ், முன்னாள் ஊராட்சி தலைவர் கணேசன், ஒன்றிய விவசாய அணி துணை அமைப்பாளர் செல்வராஜ், கிளை செயலாளர்கள் சந்திரசேகர்,சிவானந்தம் மற்றும் பலர் உள்ளனர்



இனமான பேராசிரியர் அவர்களின் 103 வது பிறந்த நாளையொட்டி கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட திமுக அலுவலகத்தில் மாவட்டச் செயலாளரும், பர்கூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான தே. மதியழகன் தலைமையில் பேராசிரியர் அவர்களது படத்திற்கு மாலை அணிவித்து, மலர் தூவி மரியாதை செலுத்தி, பொதுமக்களுக்கு இனிப்புகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் மாவட்ட அவை தலைவர் நாகராஜ், மாவட்ட துணை செயலாளர்கள் கோவிந்தசாமி, சாவித்திரி, சந்திரன் பொருளாளர் கதிரவன் தலைமை செயற்குழு உறுப்பினர்கள் கிருபாகரன், செந்தில் கிருஷ்ணகிரி நகர பொறுப்பாளர்கள் அஸ்லாம் வேல்மணி , பொதுக்குழு உறுப்பினர்கள் நாகராசன், சித்ரா சந்திரசேகர், ஒன்றிய செயலாளர்கள் சாந்தமூர்த்தி, நரசிம்மன், எக்கூர் செல்வம், குமரேசன், குண.வசந்தரசு, பேரூர் கழக செயலாளர்கள் வெங்கடப்பன், தம்பிதுரை உள்ளிட்ட ஏராளமான நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## ஆந்திரா கே.ஏ.முனுசாமி
## டிசம்பர் 20 (2016)



**எட்டு வயதிலேயே சுயமரியாதைக் கொள்கையால் ஈர்க்கப்பட்டு, அஞ்சா நெஞ்சராக உருவாகி, தி.மு.கழகம் துவங்கப்பட்ட ஒரு சில மாதங்களிலேயே, பல எதிர்ப்புகளை மீறி, ஆந்திர மாநிலத்தில் சில மாவட்டங்களில் கழகத்தின் கிளைகள் துவக்கி கழகக் கொடி ஏற்றி வைத்தவர்.**

**ஆந்திர மாநிலத்தில் பல மாவட்டங்களில் 1954 முதல் 1971 வரை 500க்கும் மேற்பட்ட கிளைக் கழகங்களைத் தொடங்கியதோடு, 1966ஆம் ஆண்டு ஆந்திர மாநிலப் பொருளாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, ஆந்திர மாநிலக் கழக அமைப்பாளராக இருபது ஆண்டுகளுக்கும் மேலாக தொடர்ந்து பொறுப்பு வகித்தவர்.**

**2007ஆம் ஆண்டு, ஈரோட்டில் நடைபெற்ற முப்பெரும் விழாவில் அண்ணா விருதினை தலைவர் கலைஞர் அவர்கள் வழங்கினார்.**

தலைமைக் கழகம்
தி.மு.க.